வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி 10.09.2024 நேரம் மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், அனுசந்தான்-தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை அமைப்பின் முதலாவது நிர்வாகக் குழுக் கூட்டத்தை, தலைமையேற்று நடத்தினார்.

சைபர் பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பின் ஒருங்கிணைந்த ஒரு பகுதி என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

நாட்டில் மின்சார வாகனங்களின் வருடாந்திர விற்பனை, 2030 ஆண்டிற்குள் 1 கோடியை தாண்டும் என, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

புதுச்சேரியில், டெங்கு காய்ச்சலை தடுப்பதில், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான ட்ரீம்ஸ்-24 திட்டத்தை, இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

-------------------------

***மோடி-ஆராய்ச்சி*** (12)

மத்திய அரசால் புதிதாக நிறுவப் பட்டுள்ள அனுசந்தான்-தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை அமைப்பின் முதலாவது நிர்வாகக் குழுக் கூட்டத்தை, இன்று புதுடெல்லியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையேற்று நடத்தினார். மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர

பிரதான், மற்றும், உயர்நிலை அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர். நாடு முழுவதிலும் உள்ள பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், ஆராய்ச்சி அமைப்புகள், மற்றும், ஆய்வுக் கூடங்களில், ஆராய்ச்சி மற்றும் புதுமையாக்க கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், தேசிய கல்விக் கொள்கைப் பரிந்துரைகளின்படி, மத்திய அரசால் நிறுவப் பட்டுள்ள அனுசந்தான் அறக்கட்டளை, நாட்டில் அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு சரியான திசை காட்டுவதற்கான உச்சநிலை அமைப்பாகவும், செயல்படும்.

-------------------------

*அமித் ஷா* 1(18)

சைபர் பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பின் ஒருங்கிணைந்த ஒரு பகுதி என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், சைபர் குற்றங்களை கையாளுவதற்கான, I4C ஒருங்கிணைப்பு மையத்தின் முதலாவது நிறுவன நாள் விழாவில் உரையாற்றிய அவர், சைபர் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமல் நாட்டை முன்னேற்ற முடியாது என்றும், சைபர் குற்றங்களுக்கு, பூகோள எல்லை இல்லை என்பதால், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து, இப்பிரச்சனையை கையாளுதல் அவசியம் என்றும் வலியுறுத்தினார். சைபர் குற்றங்களை கையாள ஏதுவாக, அடுத்த 5 ஆண்டுகளில், மொத்தம் 5 ஆயிரம் பயிற்சி பெற்ற சைபர்

கமாண்டோக்களை உருவாக்க, அரசு திட்டமிட்டு உள்ளதாகவும் அவர் தெரிவீத்தார்.

நாட்டில் டிஜிட்டல் பரிவர்த்தனைகளும், டிஜிட்டல் தரவுகளின் பயன்பாடும், நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், சைபர் பாதுகாப்புத் துறையினரின் பொறுப்புகள் பல மடங்கு அதிகரித்து இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட 3 புதிய குற்றவியல் சட்டங்களில், சைபர் க்ரைம் சவால்களை திறம்பட்ட முறையில் சமாளிக்கத் தேவையான ஷரத்துகள் உள்ளதாக அவர் கூறினார்.

*அமித் ஷா* 2 (13)

சைபர் குற்றங்களை கையாளுவதற்கான I4C ஒருங்கிணைப்பு மையம், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடன் இணைந்து, சந்தேக நபர்களின் பதிவேடு ஒன்றைத் தயாரிக்க முன் முயற்சி எடுத்து இருப்பதாகவும், எதிர்காலத்தில் சைபர் குற்றங்களை தடுக்க, இதனால் ஏதுவாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். இந்த மையம், சைபர் குற்றங்கள் பற்றிய தேசிய அளவிலான விழிப்புணர்வு இயக்கம் ஒன்றை விரைவில் தொடக்க இருப்பதாக தெரிவித்த அவர், மாநில அரசுகள் இந்த இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

சைபர் குற்றங்களில் இருந்து, மக்களை பாதுகாப்பதற்கான அரசின் பல்வேறு முக்கிய முன் முயற்சிகளை, அமைச்சர் இந்நிகழ்ச்சியின் போது தொடக்கி வைத்தார். சைபர் குற்றங்களுக்கு எதிரான தடுப்பு மையம்,

சைபர் குற்றம் பற்றிய தரவுகளை சேகரித்துப் பகுப்பாய்வு செய்வதற்கான சமன்வயா வலைதள மென்பொருள் ஆகியன, இதில் அடங்கும்.

-------------------------

*கட்கரி 1 (18)*

நாட்டில் மின்சார வாகனங்களின் விற்பனை கணிசமான அளவில் அதிகரித்து வருவதாகவும், 2030 ஆண்டிற்குள் வருடாந்திர விற்பனை எண்ணிக்கை, 1 கோடியை தாண்டும் என எதிர்பார்க்கப் படுவதாகவும், மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், இந்திய மோட்டார் வாகன உற்பத்தியாளர் சங்கத்தின் ஆண்டு மாநாட்டில் உரையாற்றிய அவர், மின்சார வாகனங்களின் விற்பனை அதிகரிப்பதால், 5 கோடி வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றார். நாட்டில் தற்போது 30 லட்சம் மின்சார வாகனங்கள், பதிவு பெற்றுள்ளதாகவும், 400 ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள், மின்சார இருசக்கர வாகனங்களின் உற்பத்தியை தொடக்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பழைய வாகனங்களை பயன்பாட்டில் இருந்து கழிப்பதற்கான புதிய கொள்கையின் கீழ், புதுமையான வாகனக் கழிப்பு முறைகளை உற்பத்தியாளர்கள் உருவாக்க வேண்டும் என அமைச்சர் கேட்டுக் கொண்டார். நாட்டில் தற்போது, சுமார் 3 கோடி வாகனங்கள், ஆயுட்காலம் முடிந்த நிலையில் உள்ள போதிலும், வாகனக் கழிப்பு மையங்கள் போதிய அளவில் இல்லை என்று அவர் கூறினார்.

மத்திய கனரக தொழில் துறை அமைச்சர் திரு. ஹெச்டி குமாரசாமி இந்நிகழ்ச்சியில் பேசுகையில், உலக அளவிலான மோட்டார் வாகன

*கட்கரி* 2 (9)

உற்பத்திக் கேந்திரமாக மேம்படும் திசையில், இந்தியா பயணித்து வருவதாக கூறினார். இந்தியாவில், வேகமாக வளர்ந்து வரும் துறைகளில் ஒன்றாக, மோட்டார் வாகன உற்பத்தித் துறை திகழ்வதாகவும், நாட்டின் பொருளாதாரத்தில், இத்துறையினர், 6.8 சதவிகித பங்களிப்பதாகவும் அவர் தெரிவித்தார். மோட்டார் வாகன உற்பத்தித் துறையினருக்கு, உற்பத்தியுடன் இணைந்த ஊக்குவிப்புத் திட்டங்களை, அரசு செயல்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

இந்திய மோட்டார் வாகன உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் திரு. வினோத் அகர்வால் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

-------------------------

*குமாரசாமி* (10)

வளங்குன்றா வளர்ச்சி என்பது, பூவுலகின் நன்மைக்கான கட்டாயத் தேவையே தவிர, வெறும் விருப்பத் தேர்வு அல்ல என்று மத்திய எஃகு மற்றும் கனரகத் தொழில் துறை அமைச்சர் திரு. ஹெச் டி குமாரசாமி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், பசுமை எஃகு பற்றிய அறிக்கையை வெளியிட்டு பேசிய அவர், எஃகுத் துறை போல, சுற்றுச் சூழல் தாக்கம் அதிகம் உள்ள துறைகளில், வளங்குன்றா வளர்ச்சிக்கான மாற்றங்களை கொண்டு வருதல் அவசியம் என்றார். எஃகு உற்பத்தித் துறையில் கார்பன்

வெளியீட்டை குறைப்பது குறித்து, தொழில்துறையினர் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் அறிந்து கொள்ள, இந்த பசுமை எஃகு அறிக்கை, உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

------------------------

*டெங்கு 1 (18)*

புதுச்சேரியில், பள்ளி அளவிலான கல்வி, விழிப்புணர்வு, மற்றும் கண்காணிப்புப் பணிகள் மூலம், டெங்கு காய்ச்சலை எதிர்த்து போராடுவதில், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையிலான, ட்ரீம்ஸ்-24 திட்டத்தை, இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்தார். டெங்கு காய்ச்சலை தடுக்கும் பயிற்சிகளுக்கான வழிகாட்டி, மற்றும், இதற்கான டெங்கு இணைப்பு செயலியை, அவர் வெளியிட்டார். புதுச்சேரி அரசின் சுகாதாரத் துறை, பள்ளிக் கல்வித் துறை, மாநில பயிற்சி மையம், மற்றும், விசிஆர்சி-கொசு நோய் தடுப்பு ஆராய்ச்சி மையம் ஆகியவை இணைந்து இந்த ட்ரீம்ஸ்-24 திட்டத்தை உருவாக்கி உள்ளன. இத்திட்டத்தின் கீழ், புதுச்சேரியில் உள்ள பள்ளிகளில் இருந்து, தலா 2 ஆசிரியர்கள் வீதம், மொத்தம் ஆயிரம் ஆசிரியர்களுக்கு, விசிஆர்சி வல்லுனர்கள் மூலம், டெங்கு பரவலை தடுப்பதில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இவ்வாறு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், தத்தம் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு டெங்கு தடுப்புப் பயிற்சி அளிப்பார்கள் என்றும், பள்ளிகளில், வாராந்திர உலர் தினம் கடைபிடிக்கப்பட்டு, மாணவர்களுக்கான விழிப்புணர்வு போட்டிகள்

நடத்தப்படும் என்றும், முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்தார். இதில் சிறப்பாக செயல்படும் மாணவர்கள், மற்றும், பள்ளிகளுக்கு, விருது வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

டெங்கு 2 (3)

இந்நிகழ்ச்சியில், சட்டப்பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், வேளாண் அமைச்சர் திரு. ஜெயகுமார், அரசு கொறடா திரு. ஏகேடி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர், மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

------------------------

***ஆப்தா மித்ரா*** (13)

புதுச்சேரியில், ஆப்தா மித்ரா திட்டத்தின் கீழ், பேரிடர் கால உதவி-மீட்புப் பணிகளில் பயிற்சி பெற்ற தன்னார்வலர்ள் 500 பேருக்கு, 15 உபகரணங்கள் அடங்கிய தொகுப்புப் பைகளை, இன்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமி வழங்கினார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், வேளாண் அமைச்சர் திரு. ஜெயகுமார், அரசுக் கொறடா திரு. ஏ.கேடி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கேஎஸ்பி ரமேஷ், திரு. ராமலிங்கம், மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் ஆகியோர் கலந்து கொண்டனர். உபகரணப் பை வழங்கப் பெற்ற 500 பேரில், 215 பேர் புதுச்சேரி, 100 பேர் காரைக்கால், 50 பேர் ஏனாம், மற்றும், 135 பேர் மாகே பிராந்தியத்தை சேர்ந்தவர்கள் என்று

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------

***மதிப்பீட்டுக் குழு*** (12)

புதுச்சேரி சட்டப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுக் கூட்டம், சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம் முன்னிலையில், குழுவின் தலைவர் திரு. நாஜிம் தலைமையில், இன்று நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி மூலம் புதிய பணிகளை தொடக்குவது குறித்தும், காலத்தோடு பணிகளை முடிப்பது குறித்தும், இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. தலைமைச் செயலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்ற இக்கூட்டத்தில், முதலமைச்சரின் பாராளுமன்றச் செயலர் திரு. ஜான்குமார், அரசுக் கொறடா திரு. ஏகேடி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கேஎஸ்பி ரமேஷ், திரு. சம்பத், திரு. ரிச்சர்டு ஜான்குமார், திரு. கல்யாண சுந்தரம், திரு. நேரு, திரு. வைத்தியநாதன், திரு. ராமலிங்கம், திரு. நாக தியாகராஜன், திரு. செந்தில்குமார், திரு. பிரகாஷ்குமார், மற்றும், அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

-------------------------

***தற்கொலை தடுப்பு*** (11)

உலக தற்கொலை தடுப்பு தினமான இன்று, புதுச்சேரியில், மாநில அரசின் சுகாதாரத் துறை சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்து விழிப்புணர்வு பேரணியில், அரசு மற்றும் தனியார் செவிலியர் பயிற்சிக்

கல்லூரிகளைச் சேர்ந்த சுமார் 300 மாணவ-மாணவியர் கலந்து கொண்டனர். தேசிய மனநல திட்டத்தின் கீழ் நடைபெற்ற இப்பேரணியை, சுகாதாரத் துறை துணை இயக்குநர் டாக்டர் ரகுநாத், இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் செவ்வேல் ஆகியோர் கொடியசைத்து தொடக்கி வைத்தனர். வளர்ந்து வரும் சமுதாயத்தினரிடையே, தற்கொலை எண்ணம் அதிகரித்து வருவதை தடுக்கும் வகையில், ஆண்டுதோறும் செப்டம்பர் 10ஆம் தேதி, உலக தற்கொலை தடுப்பு தினம் அனுசரிக்கப் படுகிறது.

------------------------

*புதுச்சேரி-பந்த் போராட்டம்* (12)

புதுச்சேரியில், மின் கட்டண உயர்வை ரத்து செய்யக் கோரியும், ப்ரீ பெய்டு மீட்டர் திட்டம், மற்றும், மின்துறை தனியார் மய முயற்சிகளை கைவிடக் கோரியும், இண்டியா கூட்டணி, வரும் 18ஆம் தேதி, பந்த் போராட்டம் அறிவித்துள்ளது. சிபிஐ மாநில செயலர் திரு. சலீம் தலைமையில், இன்று நடைபெற்ற, இண்டியா கூட்டணி கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்தில், இவ்வாறு முடிவு செய்யப் பட்டதாக, கூட்டணி கட்சித் தலைவர்கள் பின்னர் கூட்டாக, செய்தியாளர்களிடம் தெரிவித்தனர். இண்டியா கூட்டணி கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் மாநில காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. வைத்திலிங்கம், முன்னாள் முதலமைச்சர் திரு. வி. நாராயணசாமி, மாநில

திமுக அமைப்பாளர் திரு. சிவா, மற்றும், விடுதலை சிறுத்தைகள், மதிமுக உள்ளிட்ட கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

------------------------

*வானிலை (7)*

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்றும், நாளையும், தமிகழத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 16ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, கிருஷ்ணகிரி, மற்றும், நீலகிரி மாவட்டம் பந்தலூரில் தலா 4 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

------------------------

*சாலை போக்குவரத்து* (8)

தேசிய நெடுஞ்சாலைகளில், வாகனங்களுக்கான சுங்கக் கட்டணத்தின் நிர்ணயம் மற்றும் வசூல் தொடர்பான விதிமுறைகளை, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம், திருத்தி அறிவித்துள்ளது. செயற்கைக் கோள் கட்டமைப்பு மூலமான, GNSS வசதியுடன் கூடிய வாகனங்கள், சுங்கச் சாவடிக்குள் வந்து வெளியேற, தனிப் பாதை அமைக்கவும், இத்தகைய வசதி இல்லாத வாகனங்கள், தனிப் பாதைக்குள் நுழைந்தால், 2 மடங்கு சுங்கக் கட்டணம் வசூலிக்கவும், திருத்தப்பட்ட விதிமுறைகளில் வகை செய்யப் பட்டுள்ளது.

------------------------

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், அனுசந்தான்-தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை அமைப்பின் முதலாவது நிர்வாகக் குழுக் கூட்டத்தை, தலைமையேற்று நடத்தினார்.

சைபர் பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பின் ஒருங்கிணைந்த ஒரு பகுதி என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

நாட்டில் மின்சார வாகனங்களின் வருடாந்திர விற்பனை, 2030 ஆண்டிற்குள் 1 கோடியை தாண்டும் என, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

புதுச்சேரியில், டெங்கு காய்ச்சலை தடுப்பதில், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான ட்ரீம்ஸ்-24 திட்டத்தை, இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்தார்.